கட்சியின் அன்புக்குரியவர்கள். அந்தப் பகுதிகளிலே இருக்கிற கிட்டத்தட்ட 35 ஆயிரம் மக்களுடைய வாழ்வில் விளக்கு இல்லாமல் இருப்பது முறையாகுமா? விரைவாக அதைச் செய்து ஆக்க பூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர, விவரக் குறிப்பைத் தருவதில் பயன் ஒன்றும் இல்லை என்று எண்ணுகிறேன். அமைச்சர் அவர்கள் விளக்கு எரிவதற்கு ஆக்கபூர்வமான செய்திகளை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கு எரிய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு தான் வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இங்கே பிரச்சினை விளக்கு எரிய வைக்க வேண்டியது அந்த நகராட்சியினுடைய கடமை. அந்த நகராட்சிக் கட்டண நிலுவையை பாக்கி வைத்து இருக்கிற காரணத்தினால் மின் வாரியம் மேற்கொண்டு விளக்குகள் போடுவதை மேற்கொள்ள வில்லை கட்டணத்தைக் கட்டி விட்டால் விளக்குகள் தானாக வந்து விடும். இதற்கும் சுதந்திரத்திற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை.

(இ) காட்டுமன்னார் கோயில் ஒன்றிய ஆணையாளர் மக்கள் குறை தீர்ப்புக் கூட்டத்திற்கு வராமை :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பை திரு. சா. ஜெயச்சந்திரன் அவர்களுக்குப் பதிலாக டாக்டர் ந. மாசிலாமணி அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காட்டுமன்னார் கோயில் தொகுதியைச் சேர்ந்த கிராமங்களில் மக்கள் குறைகளை நேரடியாகக் கேட்பதற்கு காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரை அழைத்தும் அவர் வராதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் ஒன்றிய ஊராட்சி ஆணையாளர், ''மக்கள் குறை தீர்ப்பு கூட்டம்'' தொடர்பாக, சட்ட மன்ற உறுப்பினர் தனக்கு வாய் மூலமாகவோ

எழுத்து மூலமாகவோ எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை என்று அறிக்கை அளித்துள்ளார். ஆயினும் இது பற்றி முழுமையாக விசாரணை நடத்தும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுவார்.

(ஈ) புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டம்மை நோய் பரவியிருத்தல்

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டம்மை நோய் ஏற்பட்டுள்ளது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1987-ஆம் வருடம் சனவரி பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மூன்று மாதங்களில் தட்டம்மை (Measles) நோயினால் 26 நபர்களும், சின்னம்மை நோயினால் (Chicken pox) 34 நபர்களும் பாதிக்கப்பட்டனர். இறப்பு ஏதும் இல்லை. தட்டம்மை நோய் பரவாமல் இருக்க 10,000 நபர்களுக்கு மேல் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டு, இதர தடுப்பு நடவடிக்கைகளும் மற்றும் கண்காணிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்சமயம் நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தடுப்பு ஊசிகள் போடப் பட்டு இப்போது அம்மை நோய் பரவாமல் இருக்கிற அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அறந்தாங்கி ஒன்றியத்திலே மேற்புனைக்காடு, ஆயங்குடி, செட்டூர், திருவரங்கம் ஒன்றியத்தில் பலக்கவிடுதி, ஆலங்காடு, கொத்தமங்கலம், வேப்பங்குடி, திருக்கட்டளை ஆகிய பகுதிகளிலும், கரம்பக்குடி ஒன்றியத்திலேயேும் பரவலாக அம்மை நோய் பரவி மக்கள் அவதிக்காளாகக் கூடிய நிலைமை இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே அம்மை நோய் கடுமையாக இருப்பதால் அனைத்துப் பகுதிகளுக்கும் அதிகாரி களை அனுப்பி தடுப்பு ஊசிகளைப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட அத்தனை ஊர்களிலும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.